**08-09-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : இலங்கையில் தமிழ் வானொலி - அன்றும் இன்றும்**

**தொடக்கவுரையாடல் : எஸ். எழில்வேந்தன்**

இலங்கை வானொலி வரலாறு என்னும்போது 1921-1923 ஒரு பரீட்சார்த்த காலமாகவும் 1925 இலிருந்து முறையாக இயங்கியதாகவும் கொள்ளலாம்.

அதன்பின் இரண்டாம் உலகமாக யுத்தக் காலத்தில் இந்த சேவை இலங்கைக்கு அருகாமையில் இருந்த கூட்டுப்படையினருக்கான ஒலிபரப்பைச் செய்யப் பயன்படுத்தப் பட்டு பின்னர் வழமைக்கு திரும்பியது பின்னர் அது CBC ( Ceylon Broadcasting Corporation ) என்று பெயரிடப்பட்டது.

எமது நாடு இலங்கை சோசலிசக் குடியரசான பின்பு Sri Lanka Broadcasting Corporation எனப் பெயர் மாற்றப் பட்டது.

ஆரம்பத்தில் இலங்கை வானொலி தபால் திணைக்களத்தின் கீழ் இயங்கியது. தபால் திணைக்களத்தில் பணியாற்றிய பொறியியலாளர்கள் தான் இலங்கை வானொலி திணைக்களத்திற்கும் பொறியியலாளர்களாகப் பணியாற்றி உள்ளனர்.
அன்று இலங்கையில் வானொலி கேட்பதற்கு அனுமதிப் பத்திரத்தை தபால் திணைக்களத்தினூடாக பெறவேண்டும். தனியார் வானொலிகளின் வருகைக்கு பின்தான் அந்த அனுமதிப் பத்திர முறை நீக்கப் பட்டது.

நாற்பதுகளின் ஆரம்பத்தில்தான் தமிழில் வானொலி சேவை ஆரம்பிக்கப் பட்டது. தமிழ் ஒலிபரப்பின் தொடக்ககால வரலாறு தொடர்பான குறிப்புகள் இப்பொழுது எங்கும் இல்லை .

அந்த காலத்தில் ஒலிபரப்புக்கள் நேரடியாகவே செய்யப்பட்டன அவற்றில் நாடகங்களும் அடக்கம்

நவாலியூர் சோ.நடராஜன்,நமசிவாயம்,V.S.சிவஜானம், மயில்வாகனம், போன்றோர் ஆரம்பகாலத்தில் இருந்த வானொலி ஆளுமைகளாக கருதப்படக் கூடியவர்கள்

தொடக்ககால நிகழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்ட பெரிய இசைத்தட்டுக்களை சிலவற்றை வாசிக்க இப்போது கருவிகள் இல்லை

சிவபாதசுந்தரம் எழுதிய "ஒலிபரப்புக் கலை" என்னும் நூல்தான் தமிழில் வந்த முதலாவது ஒலிபரப்பாளர்களுக்கான கைநூல் ஆகும்.

வானொலிக் கூட்டுத்தாபனத்தில் சில கட்டுப்பாடுகள் இருந்தது வானொலியில் ஒருவர் ஒரு நிகழ்ச்சி செய்வதாயின் அவர் கட்டாயம் குரல்த்தேர்வில் சித்தியடையவேண்டும் ஒரு வானொலி நாடகம் செய்வதாயின் இரண்டு நாட்களுக்கு முன்பு ஒத்திகைக்கு செல்ல வேண்டும்

வானொலி என்பது காற்றோடு படைக்கும் கலை. அதனால் வானொலியில் தயாரித்து ஒலிபரப்பப்பட்ட எத்தனையோ முக்கியமான நிகழ்ச்சிகள் எந்தப்பதிவும் ஆவணப்படுத்தலும் இன்றிக் காற்றோடு போய்விட்டன.

வானொலி சார்ந்த நூல்களில் குறிப்பிடத்தக்கவை "வானோசை" "ஒலிபரப்புக் கலை "

ஆரம்பத்தில் பாடல்கள் ஒலிபரப்பு செய்வதற்கு ஒரு விதிமுறை இருந்தது அதாவது ஒரு பாடலை ஒருநாளில் ஒரு முறை மட்டுமே ஒலிபரப்ப முடியும்.

சில வானொலி நிலையங்களில் பேச்சு வழக்கில் பேசுவதுதான் மக்களுக்கு விளங்கும் என்று கருத்து உள்ளது. சில வானொலி நிகழ்ச்சித்தொகுப்பாளர்கள் தமிழ் நாட்டின் பேச்சு வழக்கை உள்வாங்கி பேசுகிறார்கள்

குறிப்பாக செய்தி வாசிப்பவர்கள் செய்தியின் பின்னணி தெரியாமலே சாதாரண வசனங்களை வாசிப்பது போல் வாசிப்பது வானொலியில் ஒரு நியமத் தமிழ் பேசாமல் ஒரு பிரதேசத்தின் தமிழை பிரதி பலிக்கும் வண்ணம் நிகழ்ச்சிகள் செய்தல்


(மிகுதி அடுத்த பக்கம்)

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

மின்வெளிக் குற்றங்கள் (Cyber Crime)
15-09-2011 | இராமானுஜம் நிர்ஷன்

உற்பத்தியில் பெண்களின் பங்கு பற்றிய வரலாற்றுப்பார்வை
22-09-2011 | சி. சிவசேகரம்

## 9/17



பெரியார் எனப் பரவலாக அறியப்படும் ஈ. வெ. ராமசாமி (E. V. Ramasamy, செப்டம்பர் 17, 1879 - டிசம்பர் 24, 1973)

சமூக சீர்திருத்ததிற்காகவும், சாதி ஒடுக்குமுறையை அகற்றுவதற்காகவும் மூடநம்பிக்கைகளை மக்களிடமிருந்து களைவதற்காகவும் பெண் விடுதலைக்காகவும் போராடியவர். தமிழகத்தின் மிக முக்கியமான இயக்கமாகக் கருதப்படும் திராவிடர் கழகத்தினைத் தோற்றுவித்தவர்.

இவர் தீவிர இறை மறுப்பாளராவார். எதையும் கேள்விக்குட்படுத்தி அறிவால் பகுத்துப்பார்த்தபின்னே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற பகுத்தறிவுக்கொள்கையினையும் தன்மானத்தை முன்னிறுத்திய சுயமரியாதைக் கொள்கையையும் தீவிரமாகப் பிரசாரம் செய்தார்.

இவரின் சமுதாயப் பங்களிப்பை பாராட்டி யூனஸ்கோ நிறுவனம் "புத்துலக தொலை நோக்காளர், தென்கிழக்காசியாவின் சாக்ரடிஸ், சமூக சீர்திருத்த இயக்கத்தின் தந்தை, அறியாமை மூடநம்பிக்கை, அர்த்தமற்ற சம்பிரதாயங்கள், மட்டமான பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் கடும் எதிரி" என்று பாராட்டுச் சான்றிதழ் வழங்கியுள்ளது.

பெரியார் பற்றிய தகவல்களை periyar.org எனும் வலைத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

**வலைத்தளம் :**
circle.thulaa.net

## இலங்கையில் தமிழ் வானொலி - அன்றும் இன்றும் முன் பக்கத் தொடர்ச்சி..

**உரையாடலில் கலந்துகொண்டவர்கள் கூறிய கருத்துக்கள்**

ஆரம்பகாலத்தில் கேபிள் மூலம் வானொலி சேவை இருந்தது

ஒரு தனியார் வானொலி இழிபுகழ் அடைவதை தமது சந்தைப்படுத்தல் வழிமுறையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது என அவ்வானொலியில் பணியாற்றிய ஒருவர் தகவல் சொன்னார். தமது வானொலியைத் திட்டி எழுதுவதற்காகப் பத்திரிகையாளர்களுக்கு தாம் லஞ்சம் கொடுத்ததாகவும் கூறினார்.

வானொலியில் பயன்படுத்தப்படும் மொழி பற்றிய நீண்ட விவாதம் இடம்பெற்றது. செந்தரத் தமிழைப் பயன்படுத்துவதா அல்லது வட்டார வழக்குகளைப்பயனபடுத்துவதா என்ற புள்ளியில் விவாதம் இடம் பெற்றாலும், இந்தியத்தமிழை செயற்கையாகப் பயனபடுத்துவதை பெரும்பாலானவர்கள் விமர்சித்தார்கள்.

தமக்கு இயல்பாய் வரக்கூடிய வட்டார வழக்கை கைவிட்டு இன்னொரு வட்டார வழக்கையோ அல்லது இந்திய வழக்கையோ செயற்கையாக உச்சரித்து அறிவிப்புச் செய்யும்போது அன்னத்தைப்பார்த்து காகம் நடந்ததுபோல அசிங்கமாக இருப்பதாக கருத்துரைக்கப்பட்டது.

சுவர்ண ஒலி முதன் முறையாக கொழும்பின் வட்டாரத்தமிழை ஒலிபரப்பில் பயன்படுத்தியது புதுமையாக இருந்ததுடன், அதுவரை வானொலியில் வட்டாரத்தமிழ் என்ற அடிப்படையில் வடக்குக் கிழக்குப்பகுதிகளின் தமிழையே கேட்டுவந்த கொழும்பைச்சேர்ந்தவர்களுக்கு சுவர்ண ஒலியின் பாணி மிகுந்த கவர்ச்சிகரமாக அமைந்தது என மு. மயூரன் கருத்துரைத்தார். ஆனாலும் இவ்வாறான வட்டாரத்தமிழ்ப்பயன்பாடு பொதுவான ஊடகமொன்றில் செய்யப்படும்போது அவ்வாட்டாரத்தைத் தாண்டிய நேயர்களுக்கு வசதியீனங்களை உருவாக்கும் என்பதால் எல்லாருக்கும் பொதுவான நிகழ்ச்சிகளை செய்தி அறிக்கையில் பயன்படுத்துவது போன்ற செந்தரத் தமிழில் செய்வது பயன்மிக்கது எனவும் அவர் கூறினார்.

வானொலியில் ஒலிபரப்பப்படும் பாடல்களுக்கு காப்புரிமை விதிமுறைகள் என்ன, பாடல் ஒலிபரப்பப்படுவதற்கு கட்டணங்கள் ஏதேனும் உண்டா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. தென்னிந்தியாவிலிருந்து தமிழ்ப்படங்களை இறக்குமதி செய்யும் நிறுவனமே பாடல்களுக்கான காப்புரிமையையும் வைத்திருக்கிறது என்றும், படத்திற்கு விளம்பரம் கிடைக்கிறது என்பதற்காக பாடல்களை ஒலிபரப்ப இலவசமாகவே அனுமதி தருவதோடு ஒலிபரப்பச்சொல்லி ஊக்குவிக்கவும் செய்கிறார்கள் என்று லோஷனால் பதிலளிக்கப்பட்டது. சிங்கள வானொலிகளில் சிங்களப்பாடல் ஒன்றை ஒலிபரப்பும்போது அப்பாடலின் கலைஞர்களுக்கு சிறிய தொகைப்பணம் போய்ச் சேரும்படியான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும், அது தற்போது நடைமுறையில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

## மின்வெளிக் குற்றங்கள் (Cyber Crimes)

*15-09-2011 அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு - நிர்ஷன் இராமானுஜம்*

*. அறிமுகம் - மின்வெளிக் குற்றம் ( Cyber Crime ) என்றால் என்ன?

*. மின்வெளிக் குற்றங்களில் பிரதானமானவையும் அவை கையாளப்படும் விதமும்
(உ-ம்: இணைய வழிப் பாலியல் தொடர்பாடல்கள் உள்நாட்டில் ஏற்படுத்தியுள்ள பின்விளைவுகள் - புள்ளிவிபரத் தகவல்கள்)

*. இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள்


*. மின்வெளிக் குற்றங்கள் தற்போதைய சமுதாய சூழலில் ஏற்படுத்தும் தாக்கங்கள்

*. மின்வெளிக் குற்றவாளிகளின் முக்கியமான நோக்கங்கள்

*. இலங்கைச் சட்டவரைமுறைகள்

*. தீர்வுகள்

**சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.**



கிருஸ்ணப்பிரியனின்

## வேரின் பிரசவங்கள்

**கவிதைத்தொகுப்பு அறிமுகம்**

**தலைமை உரை - சி. சிவசேகரம் | அறிமுக உரை - எஸ். விஜயகுமார் | கருத்துரைகள்: லோ. நிலா, த.வி.றிஷாங்கன்**

18.09.2011 பி.ப 4.30
கைலாசபதி கேட்போர்கூடம்,
தேசிய கலை இலக்கியப் பேரவை
(றொக்சி திரையரங்கிற்கு முன் ஒழுங்கை)

வடநாட்டின் குளிருக்கு
கால்சராயும் பூட்சோடும் பூசாரி

மோட்டார் போட்டாகிவிட்டது
பெருமாள் கோயில் தேருக்கு

திருப்பதிக்குப் போகமுடியாவிட்டால்
தி.நகர் கிளையில் காணிக்கைச் செலுத்தலாம்

முணுநாள் விரதம்
ஐயப்பனுக்குப் போதும்

அரே ராமாவில்
ஆங்கிலேய அர்ச்சகர்

இந்தோனேசியக் கோவிலில்
செருப்புப் போட்டுக் கொள்ளலாமாம்

கணேசனுக்கும்
கோழிக்கறிப் படையல்

சட்டம் எழுதியாயிற்று
எல்லா சாதியும்
கோயிலுக்கு வர

என்னாடு போனாலும்
தென்னாடுடைய சிவனுக்கு
மாதவிலக்கான பெண்கள் மட்டும்
ஆவதே இல்லை.

*[கவிஞர் கனிமொழி]*

## வலை

**பரமக்குடி தலித் இனப்படுகொலை - சட்ட விரோத மரணதண்டனை - டி. அருள் எழிலன்**

மதுரை, பரமக்குடி பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களது சாலை மறிப்புப் போராட்டத்தை சாதி வெறியுடன் ஒடுக்கிய தமிழகக் காவல்துறை நடத்திய படுகொலை பற்றியும் அச்சம்பவத்தின் பின்னணிகள் பற்றியும் விரிவாகத் தகவல் தரும் கட்டுரை.

இலகு முகவரி : **valai.thulaa.net/36**

http://globaltamilnews.net/GTMNEditorial/tabid/71/articleType/ArticleView/articleID/67056/Default.aspx

**தூக்குமேடையில் நிற்பது அரசியல் நியாயம் - தோழர் மருதையன்**

ரஜீவ் கொலைவழக்கில் கைதான மூவருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதை எதிர்க்கும் போராட்டத்தின் அரசியல் நியாயங்களை தெளிவுபடுத்தும் கட்டுரை.

இலகு முகவரி : **valai.thulaa.net/37**

http://www.vinavu.com/2011/09/07/justice-at-the-gallows/

**ஒலிபரப்புக் கலை**

ஒலிபரப்புக் கலை பற்றித் தமிழில் வெளிவந்த முதல் நூல் இது. இதனை சோ. சிவபாதசுந்தரம் எனும் இலங்கையரே எழுதியுள்ளார்.

இலகு முகவரி : **valai.thulaa.net/38**

http://www.noolaham.org/wiki/index.php?title=ஒலிபரப்புக்கலை